# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8040894

C

Under Section 173 BNSS ~~(Under Section 154 Cr.P.C.)~~
~~கு.வி.தொ.பிரிவு 154-இன் கீழ்~~

1. District : The Nilgiris PS: V & AC Year: 2024 FIR No.: 3/2024/AC/NI Date: 11.07.24
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: by the prevention of Corruption Sections பிரிவுகள்: –
(iii) Act சட்டம்: (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்: –
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 24.6.24 Date to : 10.07.24
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 17.15hrs Time to : 19.45hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 11.07.24 Time : 11.00hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) – Time : –
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : Tamil Typed complaint.
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: Taluk office, Gudalur.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் At about 50 km West.
Beat Number : – (b) Address : –
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : – District : –
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : I.S. Ummu Salma (b) Father's/ Husband's Name : D. Anirudh
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 32/24 (d) Nationality : Indian (e) Passport No. : –
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : – Place of Issue : –
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Housewife (g) Address : No.18/518, Thulasi Bhavan, Thootamoola, Gudalur, The Nilgiris.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tmt. Rajeshwari, Tahsildar, Gudalur Taluk office, The Nilgiris.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet Enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

11/7/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

11/07/2024

15. Date & Time of despatch to the court: 11.07.24
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் P. Parimaladevi
Rank: நிலை Inspector of Police, VSAC, The Nilgiris.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.**

**நீலகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.3/2024/AC/NI, u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-**

இன்று 11.07.2024-ம் தேதி வியாழன்கிழமை 10.00 மணிக்கு காவல் ஆய்வாளர், P.பரிமளாதேவி ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது நீலகிரி மாவட்டம், கூடலூர், தோட்டமூலா, துளசி பவன், கதவு எண்.18/518 என்ற முகவரியில் வசிக்கும் திரு.அனிருத் என்பவரின் மனைவி திருமதி.I.S.உம்மு சல்மா என்பவர் அலுவலகம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்த ஒரு எழுத்துமூலமான புகார் மனுவை என்னிடம் கொடுத்தார். நான் அந்த புகார் மனுவை பெற்று படித்து பார்த்தேன். புகார் சம்மந்தமாக புகார்தாரரிடம் விசாரித்தும், எதிரியின் நடத்தை குறித்து ரகசிய விசாரணை மேற்கொண்டதில், கூடலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் வட்டாட்சியர் திருமதி.ராஜேஸ்வரி என்பவர் புகார்தாரருக்கு சேரவேண்டிய நிலத்தின்மீது விசாரணை மேற்கொண்டு அறிக்கை வழங்க புகார்தாரரிடம் லஞ்சமாக ரூ.20,000/- கேட்டிருப்பது தெரியவந்தது. மேற்படி புகாரின் அடிப்படையில் எதிரியின் நற்பெயர் குறித்து ரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில், எதிரியின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும், மேலும் புகார்தாரருக்கும் எதிரிக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு முன்விரோதம் ஏதுமில்லை என்றும், அவரது புகார் நம்பகத்தன்மை கொண்டது என்றும் தெரியவந்தது. மேலும் புகாரின் உண்மைதன்மையையும், நான் மேற்கொண்ட ரகசிய விசாரணையில் இருந்தும் எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பது தெரியவந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 11.07.2024-ம் தேதி காலை 11.00 மணிக்கு நீலகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.3/2024/AC/NI-ல் ஊழல் தடுப்பு சட்ட

பிரிவு 7-ன் படி, மேற்படி எதிரி திருமதி.ராஜேஸ்வரி, வட்டாட்சியர், கூடலூர், நீலகிரி மாவட்டம் அவர்கள் மீது வழக்கு பதிவு செய்தேன். புகார்தாரரின் புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் I.S.உம்மு சல்மா, வயது 32/2024, க/பெ அனிருத், கதவு எண்.18/518, துளசி பவன், தோட்டமூலா, கூடலூர், நீலகிரி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நீலகிரி மாவட்டம். ஐயா, நான் கூடலூர், தோட்டமூலா பகுதியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் M.Sc., (Physics) B.Ed., படித்துள்ளேன். நான் 17.04.2020-ம் தேதி கூடலூரைச் சேர்ந்த அனிருத் என்பவரை காதல் திருமணம் செய்து கொண்டேன். எனது அப்பா இக்பால் ஷெரீப் மற்றும் அவரது சகோதரர்கள் 9 பேர் சேர்ந்து 1988-ம் ஆண்டு கூடலூர் தொல்மூலாவில் கூடலூர், கோத்தர்வயல், தொல்மூலா பட்டா எண்.170, சர்வே எண்.1009/3-ல் 3.27 ஏக்கர் விவசாய நிலத்தை கிரைய ஆவண எண்.831/1988-ன்படி 30.05.1988-ம் தேதி கூடலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ளனர். 2015-ம் வருடம் எனது அம்மா சூரியா பேகமும், 2023-ம் வருடம் அப்பா இக்பால் ஷெரீப்பும் மற்றும் அண்ணன் உம்மர் ஷெரீப்பும் இறந்துவிட்டார்கள். எனது பெரியப்பா திரு.அன்வர் ஷெரீப் அவர்கள் கூடலூர் கிராம சர்வே எண்.1009/3-ல் 6 சென்ட் நிலத்தை எனக்கு 07.12.2018-ம் தேதி தானமாக கொடுத்திருந்தார். கிரைய ஆவண எண்.831/1988-ன்படி தொல்மூலா பட்டா எண்.170, சர்வே எண்.1009/3-ல் 3.27 ஏக்கர் விவசாய நிலத்தில் எனது அப்பாவின் பாகமான 36 சென்ட் நிலத்தை வாரிசு என்ற முறையில் எனக்கு அப்பாவின் உடன்பிறந்தவர்கள் பெயர் மாற்றம் செய்து கொடுக்கவில்லை. அதனால் மேற்படி சர்வே எண்.1009/3-ல் உள்ள நிலத்தை அளந்து எனக்கு சேரவேண்டிய 42 சென்ட் நிலத்தின் எல்லைகளை வரையறை செய்வதற்காக 17.09.2023-ம் தேதி கூடலூர் தாலுகா அலுவலகத்தில் மனு அளித்தேன். எனது மனுமீது கூடலூர் தாலுகா அலுவலகத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்காததால், அக்டோபர் மாதம் 2023-ம் வருடம் சென்னை உயர்நீதிமன்றத்தில் எனக்கு சேரவேண்டிய 42 சென்ட் நிலத்தை அளந்து, எல்லைகளை வரையறுத்து, பட்டா வழங்கவேண்டி ரிட் மனு தாக்கல் செய்தேன். அந்த ரிட் மனு எண்.5458/2024 மீது சென்னை உயர்நீதிமன்றம்

04.03.2024-ம் தேதி 4-வது பிரதிவாதியான கூடலூர் தாசில்தார் நிலத்தினை அளந்து எனக்கு சேரவேண்டிய 42 சென்ட் நிலத்தின், எல்லைகளை அடையாளம் காண்பித்து நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தியிருந்தது. அதனால் நான் 06.03.2024-ம் தேதி கூடலூர் தாசில்தார் அலுவலக வளாகத்தில் உள்ள இ-சேவை மையத்தில் கூடலூர்-2 சர்வே எண்.1009 உட்பிரிவு 3-ல் எனக்கு சேரவேண்டிய நிலத்தின் புல எல்லைகளை அளக்கக் கோரி ரூ.860/-ஐ செலுத்தினேன். அதற்கான ஒப்புகைச் சீட்டு மனு எண்.2024/0123/11/00090. அதன்பின்னர் கூடலூர் தாலுகா நில அளவை சார் ஆய்வாளர் அவர்கள் சர்வே எண்.1009/3 part நிலத்தில் புல எல்லைகளை அளந்து வரைபடத்தில் 42 சென்ட் நிலத்தை குறிப்பிட்டு 29.04.2024-ம் தேதி வரைபடத்தை என்னிடம் கொடுத்தார். நான் அன்றைய தினமே கூடலூர் சார்பதிவாளர் அலுவலகம் சென்று வரைபடம் மற்றும் உயர்நீதிமன்ற உத்தரவை சார்பதிவாளரிடம் கொடுத்து 42 சென்ட் நிலத்தை எனது பெயரில் பதிவு செய்து கொடுக்குமாறு கேட்டேன். கூடலூர் சார்பதிவாளர் ஆவணங்களை வாங்கி பார்த்துவிட்டு, கூடலூர் தாசில்தார் அவர்கள் நிலத்தை அளந்து ரிப்போர்ட் கொடுத்தால்தான் மேற்படி நிலத்தினை உங்களுடைய பெயரில் பதிவு செய்ய இயலும் என்று கூறினார். அதனால் நான் 30.04.2024-ம் தேதி கூடலூர் தாலுகா அலுவலகம் சென்று தாசில்தார் திருமதி.ராஜேஸ்வரி அவர்களை சந்தித்து சென்னை உயர்நீதிமன்ற ஆணை, வரைபடம் மற்றும் சம்மந்தப்பட்ட ஆவணங்களை காண்பித்து, சார்பதிவாளர் கூறிய விவரங்களை கூறினேன். தாசில்தார் அவர்கள் ஆவணங்களை வாங்கி பார்த்துவிட்டு வரைபடம் மட்டும் போதாது, நான் இடத்தை பார்வையிட்டு, அளந்து, அருகில் உள்ள நில உரிமையாளர்களிடம் விசாரணை செய்துதான் அறிக்கை வழங்க இயலும் என்று தெரிவித்தார். தற்போது எலக்ஷன் டைமாக இருப்பதால், நான் அடிக்கடி எலக்ஷன் வேலையாக வெளியே சென்றுவிடுவேன் என்றும், அதனால் அலுவலகத்திற்கு வரும்போது அவருடைய செல் நம்பரில் பேசிவிட்டு வரும்படி கூறி, செல்போன் எண்.9445000557-ஐ கொடுத்தார். அதன்பின் நான் பலமுறை தாசில்தாரை நேரடியாகவும், செல்போன் மூலமும் தொடர்பு கொண்டபோது எலக்ஷன் முடிந்தபிறகு வந்து பாருங்கள் என

கூறிவிட்டார். அதனால் நான் ஜுன் மாதம் எலக்ஷன் முடிந்து ஒருவாரம் கழித்து தாசில்தார் அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்து எனது நிலத்தை பதிவு செய்வதற்கான ரிப்போர்ட் குறித்து கேட்டேன். அதற்கு அவர் விசாரணைக்கு வரச்சொல்லி உங்களுக்கு லெட்டர் அனுப்புவேன். அப்போது விசாரணைக்கு அசல் ஆவணங்களுடன் வந்தால் போதும் என்று சொன்னார். அதன்பிறகு 22.06.2024-ம் தேதி அசல் ஆவணங்களுடன் விசாரணைக்கு நிலத்தில் ஆஜராகுமாறு தாசில்தார் அவர்கள் கடிதம் அனுப்பியிருந்தார். அதன்படி நானும் எனது கணவர் திரு.அனிருத் அவர்களும் 22.06.2024-ம் தேதி தொல்மூலாவில் உள்ள நிலத்திற்கு சென்று காத்திருந்தோம். ஆனால் தாசில்தார் வரவில்லை. நான் 24.06.2024-ம் தேதி திங்கட்கிழமை மாலை சுமார் 05.15 மணிக்கு எனது செல்போனுக்கு தாசில்தார் நம்பரிலிருந்து மிஸ்டுகால் வந்திருந்தது. அதை கவனித்த நான் என்னுடைய செல்போன் எண்.9944450718-லிருந்து தாசில்தார் திருமதி.ராஜேஸ்வரி அவர்களின் செல்போன் எண்.9445000557-க்கு தொடர்பு கொண்டு பேசினேன். அப்போது தாசில்தார் மாலை 6.00 மணிக்கு தனியாக கூடலூர் தாலுகா அலுவலகம் வரும்படி என்னிடம் சொன்னார். நானும் மாலை சுமார் 6.00 மணியளவில் கூடலூர் தாலுகா அலுவலகம் சென்று தாசில்தார் அவர்களை சந்தித்தேன். தாசில்தார் என்னிடம் தொல்மூலா பகுதியில் ஒரு சென்ட் ரூ.6,00,000/- வரை விலை போகிறது. உனக்கு 42 சென்டுக்கு எப்படியும் 2 ½ கோடி கிடைக்கப்போகுது, அதனால் நான் விசாரித்து அறிக்கை கொடுக்க வேண்டுமென்றால் எனக்கு தனியாக 2,00,000/- ரூபாய் கொடுக்க வேண்டும் என்று சொன்னார். அதற்கு நான், என்னிடம் அவ்வளவு பணம் இல்லை, நான் கலப்புத்திருமணம் செய்து கொண்டதால் உறவினர்கள் யாரும் எனக்கு உதவி செய்வதில்லை என்று சொன்னேன். அதற்கு முடிவாக தாசில்தார் ரூ.50,000/- கொடுத்தால் மட்டுமே தன்னால் நிலத்தை பதிவு செய்ய விசாரணை அறிக்கை கொடுக்க முடியும் என்று கூறினார். நான் பதில் எதுவும் சொல்லாமல் வீட்டிற்கு வந்துவிட்டேன். அதன்பின் 26.06.2024-ம் தேதி தாசில்தார் அவருடைய செல்போன் எண்.9445000557-லிருந்து என்னுடைய செல்போனுக்கு மதியம் சுமார் 2.30 மணியளவில் தொடர்புகொண்டு தொல்மூலாவில் நிலம் இருக்கும் இடத்திற்கு

வரச்சொன்னார். நானும் என் கணவரும் அங்கு சென்றோம். தாசில்தார் நில அளவையரை வைத்து நிலத்தின் எல்லைகளை அளந்தார். அருகில் உள்ள நில உரிமையாளர்களுக்கு நோட்டீஸ் அனுப்ப வேண்டியுள்ளது நாளை அலுவலகத்தில் வந்து பாருங்கள் என்று என்னிடம் தாசில்தார் கூறிவிட்டு சென்றுவிட்டார். அதன்படி நான் 27.06.2024-ம் தேதி மதியம் சுமார் 03.30 மணிக்கு தாலுகா அலுவலகம் சென்று தாசில்தார் அவர்களை பார்த்தேன். அப்போது தாசில்தார் அவசர வேலையாக வெளியில் செல்லவேண்டியுள்ளதால், தன்னை 01.07.2024-ம் தேதி வந்து பார்க்கச் சொல்லிவிட்டு சென்றுவிட்டார். அதனால் நான் 01.07.2024-ம் தேதி காலை சுமார் 11.30 மணிக்கு கூடலூர் தாலுகா அலுவலகம் சென்றேன். அன்றைய தினம் கூடலூர் தொரப்பள்ளி கிராமத்தில் மழையினால் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால், தாசில்தார் தொரப்பள்ளி சென்றுள்ளதாக அந்த அலுவலகத்தில் இருந்தவர்கள் கூறினார்கள். அதன்பிறகு மாலை சுமார் 05.30 மணிக்கு மீண்டும் நான் கூடலூர் தாலுகா அலுவலகம் சென்றேன். அப்போதும் தாசில்தார் அங்கு இல்லாததால், என்னுடைய செல்போன் எண்.9944450718-லிருந்து தாசில்தார் செல்போன் எண்.9445000557-ஐ மாலை சுமார் 05.45 மணியளவில் தொடர்பு கொண்டு பேசினேன். அப்போது தாசில்தார் அவர்கள் தான் தொரப்பள்ளியில் மாவட்ட ஆட்சியருடன் இருப்பதாக தெரிவித்தார். நான் அவரிடம் நில உரிமையாளர்களிடம் விசாரணை இருப்பதாக தெரிவித்தீர்களே என்று கேட்டேன். அதற்கு அவர் சம்மந்தப்பட்டவர்களுக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளதாகவும், தான் கேட்ட பணம் ரூ.50,000/-ஐ இன்னும் எப்பொழுது தருவீர்கள் என்று கேட்டார். அதற்கு நானும் பார்க்கிறேன் மேடம் என்று சொன்னேன். அதற்கு அவர் வரும் புதன்கிழமை நிலத்தின் மீது விசாரணை வைத்துள்ளதால் என்னை கூடலூர் தாலுகா அலுவலகம் வந்து பார்க்குமாறும், வருவதற்கு முன்பு செல்போனில் பேசிவிட்டு வரும்படி கூறி போனை துண்டித்து விட்டார். பின்னர் நான் 02.07.2024-ம் தேதி மாலை சுமார் 06.30 மணியளவில் தாசில்தார் அவர்களை செல்போனில் தொடர்பு கொண்டு நாளை விசாரணைக்கு எத்தனை மணிக்கு வரவேண்டும் என்று கேட்டேன். அதற்கு அவர் நாளை 03.07.2024-ம் தேதி மாலை தாலுகா அலுவலகம் வந்து

பார்க்குமாறு கூறினார். அதன்படி நான் 03.07.2024-ம் தேதி மாலை சுமார் 05.15 மணியளவில் கூடலூர் தாலுகா அலுவலகம் சென்றேன். அங்கிருந்த ஒருவர் தாசில்தார் மேடம் ஊட்டி சென்றுவிட்டதாகவும், வருவதற்கு இரவு நேரமாகிவிடும் நாளை காலை வந்து பாருங்கள் என்று சொன்னார். அதனால் நான் மீண்டும் 04.07.2024-ம் தேதி காலை சுமார் 11.30 மணிக்கு கூடலூர் தாலுகா அலுவலகத்திற்கு சென்றேன். அங்கு பொதுமக்கள் அதிகமாக இருந்ததால், நான் அங்கேயே காத்திருந்து சுமார் 12.30 மணிக்கு தாசில்தாரை சந்தித்து எனது ரிப்போர்ட் சம்மந்தமாக அவரிடம் கேட்டேன். அதற்கு அவர் பணம் ரூ.50,000/- எங்கே என்று கேட்டார். நான் அவ்வளவு பணம் ரெடி பண்ணமுடியவில்லை என்றும், எனது கணவர் கார்களுக்கு பாலிஸ் போடும் வேலை செய்கிறார், கிடைக்கும் வருமானம் குடும்ப செலவிற்கே சரியாக இருக்கிறதென்று எனது குடும்ப சூழ்நிலையை எடுத்து சொன்னேன். அதற்கு அவர் யோசித்துவிட்டு உன்னை பார்த்தாலும் பாவமாகத்தான் இருக்கிறது சரி பணம் ரூ.20,000/-மாவது கொடுத்தால்தான் நிலத்தை உனது பெயரில் பத்திரப்பதிவு செய்ய ரிப்போர்ட் கொடுக்கமுடியும், இல்லையென்றால் என்னிடமிருந்து ரிப்போர்ட்டை வாங்கவே முடியாது என்று கண்டிப்புடன் கூறிவிட்டார். மேலும், 06.07.2024-ம் தேதி சனிக்கிழமை நிலத்தின் விசாரணைக்கு உங்க பெரியப்பா மகன் இப்ராஹிம் ஷெரீப் வருவதாக தெரிவித்துள்ளார். அதனால் சனிக்கிழமை தன்னை வந்து பார்க்குமாறு கூறினார். அதன்படி நான் 06.07.2024-ம் தேதி காலை சுமார் 11.30 மணியளவில் கூடலூர் தாலுகா அலுவலகம் சென்று பார்த்தபோது, தாசில்தார் அங்கில்லை. அவர் ஓவேலி சென்றுள்ளதாகவும் மதியம் 03.00 மணிக்குமேல் வந்தால் தாசில்தாரை பார்க்கலாம் என்று அலுவலகத்தில் இருந்தவர்கள் சொன்னார்கள். நான் மாலை சுமார் 04.00 மணியளவில் தாலுகா அலுவலகம் சென்று தாசில்தாரை சந்தித்தபோது, அவர் என்னிடம் விசாரணைக்கு இக்பால் ஷெரீப் வரவில்லை, அதனால் தனது விசாரணை இத்துடன் முடிந்து விட்டது என்றும், ரிப்போர்ட்டை ரெடி செய்து தருகிறேன் இரவு 9.00 மணிக்கு தன்னை செல்போனில் தொடர்பு கொள்ளும்படி கூறினார். அதன்படி நானும் என்னுடைய செல்போனிலிருந்து இரவு சுமார் 9.20 மணிக்கு தாசில்தாரை தொடர்பு கொண்டபோது, தாசில்தார்

திருமதி.ராஜேஸ்வரி தான் கேட்ட பணம் ரூ.20,000/- என்னாச்சு என்று கேட்டார். நான் பணம் இன்னும் ரெடியாகவில்லை என்று சொன்னேன். அதற்கு தாசில்தார் பணம் ரூ.20,000/- கொடுத்தால் மட்டுமே நிலத்தை உனது பெயரில் பதிவு செய்ய ரிப்போர்ட் கொடுக்க முடியும் என்றும், பணத்தை ரெடி செய்தவுடன் தன்னை அலுவலகத்தில் நேரில் வந்து பார்க்கும்படி கூறினார். மேலும் தாசில்தார் என்னிடம் ஒருமுறை டாக்குமெண்டை தான் சரிபார்க்க வேண்டியுள்ளது அதனால் எதற்கும் வருகிற புதன்கிழமை அலுவலகம் வந்து தன்னை பார்க்கும்படி கூறினார். அதனால் நேற்று 10.07.2024-ம் தேதி மாலை சுமார் 05.30 மணியளவில் தாலுகா அலுவலகம் சென்று தாசில்தார் அவர்களை சந்தித்தேன். அப்போது தாசில்தார் அவர்கள் RDO-உடன் அவசர வேலையாக வெளியே செல்லவேண்டியுள்ளது என்று கூறி என்னை அலுவலகத்திலேயே காத்திருக்க சொன்னதால், நான் அங்கேயே காத்திருந்தேன். பின்னர் இரவு சுமார் 07.45 மணியளவில் தாசில்தார் அவர்கள் மீண்டும் அலுவலகத்திற்கு வந்தார். என்னை பார்த்த அவர் அவரது அறைக்கு அழைத்து நான் கேட்ட பணம் ரூ.20,000/- கொண்டு வந்தீர்களா என்று கேட்டார். எனக்கு இரண்டு நாட்களாக உடல்நிலை சரியில்லாததால், பணம் ஏற்பாடு செய்யமுடியவில்லை என்று சொன்னேன். அதற்கு தாசில்தார் அவர்கள் நாளை 11.07.2024-ம் தேதி மாலைக்குள் பணம் ரூ.20,000/-ஐ கொண்டுவந்து தன்னிடம் கொடுக்கவேண்டும் என்றும், இல்லையென்றால் ரிப்போர்ட்டை மாற்றி எழுதி நிலத்தை பதிவு செய்யமுடியாதபடி செய்துவிடுவேன் என்று சொன்னார். எனக்கு கூடலூர் தாசில்தார் திருமதி.ராஜேஸ்வரி அவர்கள் கேட்கும் பணம் ரூ.20,000/-ஐ லஞ்சமாக கொடுத்து விசாரணை அறிக்கை பெற்று எனது பெயரில் நிலத்தை பதிவு செய்ய விருப்பம் இல்லை. நான் இன்று மாலை பணம் ரூ.20,000/-உடன் கூடலூர் தாசில்தார் திருமதி.ராஜேஸ்வரி அவர்களை சந்திக்க செல்கிறேன். எனவே கூடலூர் தாசில்தார், திருமதி.ராஜேஸ்வரி அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். தேதி 11.07.2024 இப்படிக்கு ஒப்பம் (XXXX) 11.07.2024 (I.S.உம்மு சல்மா) Submitted: Received the above complaint on 11.07.2024 at 10.00 hrs and after conducting a discreet enquiry, registered

a case in V & AC, The Nilgiris Cr.No.3/2024 u/s 7 of the PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018 on 11.07.2024 at 11.00 hrs. Sd (XXXX) 11.07.2024 Inspr. of Police, V&AC, The Nilgiris. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் தலைமை நீதித்துறை நடுவர், தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், உதகமண்டலம் அவர்களுக்கு அனுப்பிவைத்தும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தேன்.

(P.பரிமளாதேவி)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நீலகிரி.